



## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது குழந்தையின் கவன சக்தி வளர்கிறது. நிஜ வாழ்க்கையில் அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர் மற்றும் கதைகளில் வருவது போல நடித்துக் காட்டுகின்றனர்.

3 வயதாகும் போது குழந்தைகள் தம்மைச் சுற்றியுள்ள விடயங்கள் 'ஏன்' நடக்கின்றன என்பதை அறிவதில் ஆர்வமாய் இருப்பார்கள்.

உங்களது குழந்தையின் நகைச்சுவை நயம் வளர ஆரம்பிக்கிறது. அர்த்தமுள்ள விடயங்கள் எவை என்பதை அவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.

5 வார்த்தைகள் வரை கொண்ட நீண்ட வாக்கியங்களை உங்கள் குழந்தை பேச ஆரம்பிக்கிறது.

புத்தகங்களைப் படித்துக் காட்டுவதன் மூலம் குழந்தையின் வார்த்தைக் களஞ்சியத்தை விரிவாக்கலாம்.

படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், கோந்து வைத்து ஒட்டுதல் மற்றும் வெட்டுதல் ஆகியவற்றின் மூலம் கையையும், விரல்களையும் எழுதுவதற்காகத் தயார்ப்படுத்துவதற்கு இது சிறந்த நேரமாகும்.

உங்களுக்கு நன்கு பேசக்கூடிய மொழியில் நீங்கள் பேசுவதால் உங்கள் குழந்தையின் மொழி மேலும் வளர்ச்சியடையும்.

## இச் சமயத்தில் நீங்கள் என்ன செய்யலாம்?

கதைகளின் அர்த்தங்கள் பற்றி உங்கள் குழந்தை ஆழ்ந்து சிந்திக்க உதவுங்கள். கதைகளில் வரும் நிகழ்ச்சிகள் ஏன் அப்படி நடந்தன என்றும், வேறு என்ன நடந்திருக்கலாம் என்றும் கேளுங்கள்.

கேள்விகள் கேட்பதன் மூலமே குழந்தைகள் தமது உலகம் பற்றி மேலும் தெரிந்து கொள்கின்றனர். பதிலளிக்கவும், விளக்கம் தரவும், காரணங்களைச் சொல்லவும் நேரம் ஒதுக்குங்கள்.

குழந்தையுடன் அமர்ந்து புதிர்கள் மற்றும் கடினமான விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வழிகளை அறிந்து கொள்ள ஊக்கம் அளியுங்கள்.

குழந்தையுடன் வெளியே செல்லும்போது நீங்கள் பார்க்கும் அடையாளக் குறிகள் மற்றும் சின்னங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுங்கள்.

உன்னிப்பாய்க் கவனித்து, மேலும் நீங்கள் சொல்லுவதைக் குழந்தை செய்யக்குடிய பாவனையுடன் நிறைந்த பாடல்களைப் பாடுங்கள்.

பந்துகள், மணல், விளையாட்டுக் களிமண், தூரிகைககள், ஒட்டும் நாடா, மணிகள், குறடு மற்றும் கட்டுமான பொம்மைகள் ஆகிவற்றைக் குழந்தைகளுக்கு விளையாடக் கொடுத்து இதன் மூலம் அவர்களது கைத் திறன்களை முன்னனேறச் செய்யுங்கள்.

கற்றுக் கொள்ளவும், விளையாடவும், புதிய இடங்களை ஆயவும்இ மற்றவருடன் பழகும் சமூக வாய்ப்புக்களை குழந்தைகளுக்கு அளிக்க அவர்களை விளையாட்டுக் குழுக்கள், முன்பருவப்பள்ளி அல்லது குழந்தைப் பேணக மையத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

## யாரால் உதவ முடியும்?

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்.
உங்களது உள்ளூர் மருத்துவர்.
உங்களது சமூகத் தாதி அல்லது சேவகர்.
முன்பருவப்பள்ளிப் பணியாளர்கள், குழந்தை கவனிப்பு மையம் அல்லது விளையாட்டுக்குழு மற்றும் சிறுவர் நூலகர்கள்.
குழந்தையின் முதல் வார்த்தைகள் இணையத்தளம www.earlywords.info

உங்களது குழந்தையின் வளர்ச்சி குறித்து உங்களுக்குக் கவலை இருப்பின், உங்களது மருத்துவர், சமூகத் தாதி அல்லது ஆரம்பகால குழந்தைப்பருவ ஆசிரியர் ஆகியோரிடம் மேலதிகக் கருத்துக்களை நாடுங்கள்.

உங்கள் குழந்தைக்கு 4 வயதாகும் போது மேலதிக ஆலோசனைகளை நாடுங்கள்.

**Early Words is a project of Children First, funded by Families NSW, a NSW Government initiative**

# ஆரம்பப் படிப்பறிவு மற்றும் பள்ளிக்கான ஆயத்தம்

கீழ்க்காணும் விடயங்கள் ஆரம்பப் படிப்பறிவுப் பள்ளியில் உங்கள் குழந்தையின் துவக்கம் சிறப்பாய் அமைய உதவும்.

உங்கள் குழந்தை இத்திறன்களில் பலவற்றை அடுத்த 2 ஆண்டுகளில் கற்றுக்கொள்ளும். இது ஒரு வழிகாட்டி என்பதையும், நீங்கள் சரிபார்க்க வேண்டிய விடயங்களின் அட்டவணை அல்ல என்பதையும் தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.

- கவனம் மற்றம் கவனக் குவிப்புத் திறன்கள்
- செவி மடுத்தல்
- கண்பார்வை
- பேச்சைக் கவனித்தல்
- சொல்லப்படும் தகவலையும் உத்தரவுகளையும் புரிந்து கொள்ளல்
- எதுகை-மோனையுள்ள வார்த்தைகளை அடையாளம் காணல்
- பேசுதல் (வார்த்தைகள், வாக்கியங்கள் மற்றும் உரையாடல்கள் மூலம்)
- கேள்விகள் கேட்டல் மற்றும் அவற்றிற்குப் பதிலளித்தல்
- தெளிவான உச்சரிப்புடன் பேசுதல்
- வார்த்தைகளுக்கும், படங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அடையாளம் காணல்
- புத்தகங்கள் எவ்வாறு பயனளிக்கின்றன என்று புரிந்து கொள்ளல்
- வரைதல் மற்றும் எழுத முயற்சித்தல் (உதாரணமாக: தன் பெயர்)
- எழுத்துத் தொகுதியில் உள்ள எழுத்துக்களுக்குப் பெயர்களும், ஒலிகளும் இருப்பதைத் தெரிந்து கொள்ளல்
- எழுத்துக்களுக்கும், எண்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அறிதல்
- விடை காணல் (பிரச்சினை தீர்த்தல்), ஆர்வம் மற்றும் அதி ஆழ்ந்த சிந்தனைகள்
- நம்பிக்கை மற்றும் புதிய விடயங்களை முயன்று பார்ப்பதற்கான மன ஆயத்தம்
- சுதந்திரம் மற்றும் சுய உதவித் திறன்கள்
- முழு உடல் இயக்கங்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு, சமநிலைத் திறன் மற்றும் வலிமை
- விரல்களையும், கைகளையும் துல்லியமாய்ப் பயன்படுத்துதல்

இது ஒவ்வொன்றையும் குறித்த மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து ‘முதல் வார்த்தைகள் - 3-ல் இருந்து 5 வயது வரை’ என்ற DVD- யைப் பாருங்கள் மற்றும் உங்களது சமூகத் தாதி, பொது மருத்துவர் அல்லது குழந்தைப் பேணக ஆசிரியரைக் கேளுங்கள்.

எமது இணையத்தளத்தினைப் பாருங்கள்: www.earlywords.info